©
GOVERNMENT OF TAMIL NADU
2014

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[Price: Re. 0.80 Paise.

# TAMIL NADU GOVERNMENT GAZETTE

## EXTRAORDINARY PUBLISHED BY AUTHORITY

No. 243] CHENNAI, FRIDAY, NOVEMBER 21, 2014
Karthigai 5, Jaya, Thiruvalluvar Aandu–2045

## Part VI—Section 2

**Notifications or Orders of interest to a section of the public issued by Heads of Departments, etc.**

### NOTIFICATIONS BY HEADS OF DEPARTMENTS, ETC.

#### COLLECTORS AND LOCAL AUTHORITIES

**மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் ஊராட்சிகளின் ஆய்வாளர், புதுக்கோட்டை மாவட்டம்.**

**புதுக்கோட்டை மாவட்டம், கறம்பக்குடி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கீராத்தூர் கிராம ஊராட்சித்தலைவர் பதவி நீக்கம் குறித்த அறிவிக்கை**

*(ந.க.எண். 4829/2012/அ3/ஊரா)*

**No. VI(2)/270(a)/2014.**

புதுக்கோட்டை மாவட்டம், கறம்பக்குடி ஊராட்சி ஒன்றியம், கீராத்தூர் கிராம ஊராட்சித் தலைவர் திரு. நா. ரெங்கசாமி என்பவர் ஊராட்சியில் தனது அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்திருப்பதுடன் ஊராட்சி நிதிக்கு பெருமளவு நிதியிழப்பு ஏற்படுத்தி முறைகேடு செய்திருப்பதும் மற்றும் ஊராட்சி நிதியில் பல்வேறு தலைப்புகளின்கீழ் விதிமுறைகளை பின்பற்றாமல் செலவினம் மேற்கொண்டு அதன் மூலம் ஊராட்சி நிதிக்கு பெருமளவு நிதியிழப்பு ஏற்படுத்திய காரணங்களுக்காகவும் இவர் தொடர்ந்து ஊராட்சித் தலைவராக செயல்பட்டால் ஊராட்சி நிதிக்கு பெருமளவு நிதியிழப்பு ஏற்படுத்துவார் என்பதுடன் தனது ஊராட்சித்தலைவர் அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்வார் என்பதை கருத்தில் கொண்டும் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994, பிரிவு 205 உட்பிரிவு (11)—இல் ஊராட்சிகளின் ஆய்வாளர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவருக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தினைப் பயன்படுத்தி கீராத்தூர் ஊராட்சித்தலைவர் திரு. நா. ரெங்கசாமி என்பவரை கிராம ஊராட்சித்தலைவர் பதவியிலிருந்து நீக்கம் செய்து இதன் மூலம் அறிவிக்கை செய்யப்படுகிறது.

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994, பிரிவு 262 (1)—இன் கீழ் இந்த பதவி நீக்கம் குறித்த அறிவிக்கை *தமிழ்நாடு அரசிதழில்* வெளியிடப்படும் நாள் முதல் அமலுக்கு வரும்.

புதுக்கோட்டை,
2014 நவம்பர் 21.

**செ. மனோகரன்,**
*மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும்*
*ஊராட்சிகளின் ஆய்வாளர்.*

PRINTED AND PUBLISHED BY THE DIRECTOR OF STATIONERY AND PRINTING, CHENNAI
ON BEHALF OF THE GOVERNMENT OF TAMIL NADU

DTP—VI-2 Ex. (243)